ஒன்பதாம் வகுப்பு : இரண்டாம் பருவம்

தமிழ் இரண்டாம் தாள் வினாவிடைகள்

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா, பட்டதாரி ஆசிரியர்-
தமிழ்.ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி)
உயர்நிலைப் பள்ளி, ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

இயல் -1

1.இடைச்சொற்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுவன யாவை?

இடைச் சொசற்கள் ,பெயரையும் வினையையும் சார்ந்து இயங்குபவை. தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

2.இடைச்சொற்கள் சிலவற்றை எழுதுக.

இன் , கு, உடைய, உம், ஐ, விட , கள் , ஆனால் , தான் , போல , உடன்.

3.தற்காலத் தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடைச்சொற்களை எழுதுக.

உம், ஓ, ஏ, தான் , மட்டும் , ஆவது , கூட , ஆ , ஆம்

4.உம் என்ற இடைச்சொல் எதிர்மறை மற்றும் உயர்வு சிறப்பில் வருமாறு சொற்றொடர்கள் அமைக்க.

எதிர்மறை உம்மை:

1.மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை.

உயர்வு சிறப்பும்மை:

2.பாடகர்களும் போற்றும் பாடகர்.

5.தான் என்னும் இடைச்சொலை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

1.நிர்மலா தான் நேற்று விழாவில் பாடினாள்.

2.நிர்மலா நேற்று தான் விழாவில் பாடினாள்.

3.நிர்மலா நேற்று விழாவில் தான் பாடினாள்.

4.நிர்மலா நேற்று விழாவில் தான் பாடினாள்.

6.செய்யுளுக்கே உரிய சொற்கள் எவை?(அல்லது) உரிச்சொற்கள் குறித்து நன்னூலார் கூறுவன யாவை?

செய்யுளுக்கே உரிய சொற்கள் உரிச்சொற்கள். பெயரையும் வினையையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்தும்.இசை , குறிப்பு , பண்பு என்னும் பொருளுக்கு உரியது. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையன.

7.மிகுதி என்னும் பொருளில் இடம் பெறும் உரிச்சொற்கள் யாவை?

உறு. தவ , நனி ஆகிய மூன்றும் மிகுதி என்னும் பொருளில் இடம் பெறும் உரிச்சொற்கள் ஆகும்.

8.அவர்களுக்குப் பரிசு தருவேன் - இத்தொடரில் ‘ஆ’ என்னும் இடைச்சொல்லை சேர்த்து வினாக்கள் அமைக்க?

1.அவர்களுக்குப் பரிசு தருவேனா?

2.அவர்களுக்கா பரிசு தருவேன்?

3.அவர்களுக்குப் பரிசா தருவேன்?

9.செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருளில் இடம்பெறுகின்றன?

பெயரையும் வினையையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்தும்.இசை , குறிப்பு , பண்பு என்னும் பொருளுக்கு உரியது. உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையன. ஒரு சொல் பல பொருளுக்கும் , பல சொல் ஒரு பொருளுக்கும் உரிச்சொல் இடம்பெறும்.

10.தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக

மழ , குழ , உவப்பு , பசப்பு ,செழுமை , விழுமம் ஆகியன.

11.பதம் எத்தனை வகைப்படும்?

பகுபதம் , பகாப்பதம் என இருவகைப்படும்.

12.பகுபதம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

பிரிக்கக் கூடியதும் ,பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.

1.பெயர்ப் பகுபதம் 2.வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

13.பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?

பகுபத உறுப்புகள் 6 வகைப்படும். பகுதி , விகுதி . சந்தி , இடைநிலை , சாரியை . விகாரம்.

14.பிழை நீக்கி எழுதுக.
1.மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
மதீனா சிறந்த இசை வல்லுநராக வேண்டும்.

2.நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

.நல்ல தமிழில் எழுதுவோம்.

3.பவளவிழி தான் பரிசு உரியவள்.

பவளவிழி தான் பரிசுக்கு உரியவள்.

4.துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

5.குழலியும் பாடத் தெரியும்.

குழலிக்கும் பாடத் தெரியும்.

15.இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

1.பெரும் மழை பெய்தது , வெள்ளம் கரை புரண்டு ஓடியது..

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

2.அலுவலர் வந்தார், அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

அலுவலர் வந்ததும் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

3.சுடர்க்கொடி பாடினாள், மாலன் பாடினான்.

சுடர்க்கொடி பாடியதால் மாலனும் பாடினான்.

4.பழனிமலை பெரியது , இமயமலை மிகப்பெரியது.

பழனிமலை பெரியது , இமயமலையோ மிகப்பெரியது.

5.கவலையற்ற எதிர்காலம் , கல்வியே நிகழ் காலம்

கவலையற்ற எதிர்காலத்திற்குக் கல்வியே நிகழ் காலம்.

விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தகத் திருவிழா**

நாள்: செப்டம்பர் 19 - 28வரை

இடம்: சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

நேரம் : காலை 8 முதல் மாலை 6 வரை

(முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கிவைக்கிறார்)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்

## தஞ்சையில் புத்தகத் திருவிழா

செப்டம்பர் 19 முதல் 28 வரை தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் அறிவுக் களஞ்சியமான புத்தகங்களின் சங்கமமாம் புத்தகத் திருவிழா நடைபெறுகின்றது. முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் புத்தகத் திருவிழாவினைத் தொடங்கி வைக்கிறார். நாள்தோறும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை அறிவுப் புதையலை அள்ளிச் செல்லலாம். சிந்தைக்குப் பெருவிருந்தாய் மாலை 6 மணிக்குப் புதிய நூல் வெளியீடும் , தலைசிறந்தப் பேச்சாளர்களின் பேச்சும் இடம்பெறும்.

கடிதம் எழுதுதல்

உங்னள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

அனுப்புநர்

-------------------------------(பெயர்)

9 ஆம் வகுப்பு,

---------------------------------------------------------------- பள்ளி,

ஈரோடு - 638 001.

பெறுநர்

நெய்தல் பதிப்பகம்,

சென்னை - 600 017.

ஐயா,

பொருள்: தமிழ் - தமிழ் - ஆங்கிலம் அகராதி அனுப்புதல் சார்பாக.

வணக்கம். எங்களுக்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் கையடக்க அகராதி பத்துப் படிகள் தேவைப்படுகின்றன. நூலின் மற்றும் பதிவஞ்சல் தொகையாக 800 ரூபாய் கேட்பு வரைவோலையை இத்துடன் அனுப்பியுள்ளோம். மேற்கண்ட முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம். நன்றி.

இடம்: ஈரோடு இப்படிக்கு,

நாள்: --------------------------(கையொப்பம்)

உறைமேல் முகவரி

பெறுநர்

நெய்தல் பதிப்பகம்,

சென்னை - 600 017.

www.Padasalai.Net

துணைப்பாடம் : வீட்டிற்கோர் புத்தக சாலை

1.நூலகம் , நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

முன்னுரை

வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும் என்ற கருத்தை நம் ஒவ்வொருவரின் மனத்திலும் விதைத்தவர் பேரறிஞர் அண்ணா. நூலகம் , நூல்கள் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளைக் காண்போம்.

நூலகம்:

வீடுகளில் மேஜை , நாற்காலி உள்ளிட்ட பலபொருட்களும் , சிறுகடை அளவுக்கு உடைகளும் , சிறு வைத்தியசாலை அளவுக்கு மருந்துகள் இருக்கும் . ஆனால் புத்தகசாலை மட்டும் இருக்காது. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைக்கு அடுத்த இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.மக்கள் மனத்திலே உலக அறிவு புக வழிவகை செய்யவேண்டும்.அவர்கள் உலகம் மற்றும் நாட்டை அறிய , ஏடுகள் வேண்டும். அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் . விஷேசங்களுக்குச் செல்லும் போது புத்தகங்கள் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் சிறு புத்தகசாலையை எளிதில் அமைக்கலாம்.

நூல்கள்:

- ❖ பூகோளம் , சரித்திரம் தொடர்பான ஏடுகள் இருக்க வேண்டும்.
- ❖ நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட , வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயம் இருக்க வேண்டும்.
- ❖ சங்கஇலக்கிய சாராம்சத்தை சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் உள்ள ஏடுகள் இருக்க வேண்டும்.
- ❖ விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவல்களைத் தரும் நூல்கள் இருக்க வேண்டும்.
- ❖ விடுதலைக்கு உழைத்தோர், மக்கள் மனமாசு துடைத்தோர் , தொலை தேசங்களைக் காண்டோர் , வீரர்கள் , விவேகிகள் ஆகியோர் வாழ்க்கைக்குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

முடிவுரை:

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால் , நாட்டிற்கு நல்ல நிலை ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா தம் வானொலிச் சித்திரத்தில் தெரிவிக்கிறார்.

இயல் -2

இலக்கணம் : ஆகுபெயர்

1.ஆகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.

ஒன்றின் இயற்பெயர் , அதனோடு தொடர்புடைய மற்றொன்றித் தொன்று தொட்டு ஆகிவருவது ஆகுபெயர் ஆகும்.

சான்று: “ ஊர் சிரித்தது.

2.ஆகுபெயர் எத்தனை வகைப்படும் ?

ஆகுபெயர்களைத் தொல்காப்பியர் ஏழாகவும் , நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

3.பொருளாகுபெயரை (முதலாகு பெயர்) விளக்குக.

ஒரு முழுப்பொருளின் பெயர் , அதனைச் சுட்டாது அதன் முதற்பொருளுக்கு ஆகிவருவது பொருளாகுபெயர் (முதலாகு பெயர்) எனப்படும்.

சான்று: முல்லையைத் தொடுத்தாள்.

முதற்பொருளான முல்லைக் கொடி , அதன் உறுப்பாகிய பூவுக்கு ஆகிவந்தது..

4.இடவாகு பெயரை விளக்குக.

இடப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது இடவாகு பெயர் எனப்படும்.

சான்று: வகுப்பறை சிரித்தது.

வகுப்பறையாகிய இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.

5.காலவாகு பெயரை விளக்குக.

காலப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது காலவாகு பெயர் எனப்படும்.

சான்று: கார் அறுத்தான்

கார் என்னும் காலப்பெயர் , அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

6.”மருக்கொழுந்து நட்டான்” - இது எவ்வகை ஆகுபெயரைச் சுட்டி விளக்குக.

இது சினையாகு பெயர்.

சினைப் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது சினையாகு பெயர் எனப்படும்.

மருக்கொழுந்து என்னும் சினைப்பெயர் , அதன் செடிக்கு ஆகி வந்தது.

7.பண்பாகுபெயரை விளக்குக.

பண்புப்பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது பண்பாகு பெயர் எனப்படும்.

சான்று : மஞ்சள் பூசினாள்

மஞ்சள் என்னும் பண்பு , அவ்வண்ணம் உள்ள கிழங்கிற்கு ஆகி வந்தது.

www.Padasalai.Net

8.தொழிலாகு பெயரை விளக்குக.

தொழிலின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பெயருக்கு ஆகிவருது தொழிலாகு பெயர் எனப்படும்.

சான்று : வற்றல் தின்றான்.

வற்றல் தொழிற்பெயர் , வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வருவது.

9.கருவியாகு பெயரை விளக்குக.

கருவியின் பெயர் காரியத்திற்கு ஆகி வருவது கருவியாகு பெயர் எனப்படும்.

சான்று : வானொலி கேட்டு மகிழ்ந்தனர்.

வானொலி என்னும் கருவி அதன் காரியமாகிய நிகழ்ச்சிக்கு ஆகி வந்தது.

10.காரியவாகுபெயரை விளக்குக.

காரியத்தின் பெயர் காரணத்திற்கு ஆகி வருவது காரியவாகுபெயர் எனப்படும்.

சான்று : பைங்கூழ் வளர்ந்தது.

கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது.

11.கருத்தாவாகு பெயரை விளக்குக.

கருத்தாவின் பெயர் அவரால் இயற்றப்பட்ட காரியத்திற்கு ஆகி வருவது கருத்தாவாகு பெயர் எனப்படும்.

சான்று : அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்.

அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர்., அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.

12.எண்ணலளவை ஆகுபெயரை விளக்குக.

எண்ணின் பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணலளவை ஆகுபெயர் எனப்படும்.

சான்று: ஒன்று பெற்றால் ஒளிமயம்

ஒன்று என்ற எண்ணுப்பெயர் , அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வருகிறது.

13.எடுத்தலளவை ஆகுபெயர் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

எடுத்தலளவைப் பெயர் (நிறுத்தலளவைப் பெயர்) அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது எடுத்தலவை ஆகுபெயர் எனப்படும்.

சான்று : இரண்டு கிலோ கொடு

எடுத்தல் என்னும் அளவை பெயர் , அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது..

14.முகத்தலளவை ஆகுபெயரை விளக்குக.

முகத்தல் அளவைப்பெயர் அதனோடு தொடர்புள்ள பொருளுக்கு ஆகி வருவது முகத்தலளவையாகு பெயர்

சான்று : அரை லிட்டர் வாங்கு.

முகந்து அளக்கும் முகத்தல் அளவைப் பெயர் , அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

15.நீட்டலளவை ஆகுபெயரை விளக்குக.

நீட்டல் அளவைப்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது நீட்டலளவை ஆகுபெயர் எனப்படும்.

சான்று: ஐந்து மீட்டர் வெட்டினான்.

15.தற்காலப் பேச்சு வழக்கிலும் , எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தற்காலப்பேச்சு வழக்கில் ஆகுபெயர்:

1.பால் வந்ததா? - என்பது பால் விற்பனை செய்யும் பால்காரருக்கு ஆகி வந்தது.

2.பேருந்து நிறுத்தத்தில் 12 போயிருச்சா? எனக் கேட்பது 12 எண்ணுள்ள பேருந்திற்கு ஆகி வந்தது.

தற்கால எழுத்து வழக்கில் ஆகுபெயர்:

1.”ஈரோடு தமிழ்ச் சங்கம் சார்பில் இரு நாள் தெய்வ நூல் பயிலரங்கம் “ என்ற செய்தித்தாள் செய்தியில் தெய்வ நூல் என்பது திருக்குறள் நூலுக்கு ஆகி வந்தது.

16.பட்டப் பெயர்கள் ஆகுபெயராகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

பட்டப்பெயர்கள் ஆகுபெயராகும்.

சான்று:

1.மகாகவி பாடினார். ( பாரதியின் பட்டப்பெயராக ஆகி வந்தது.)

2.ரோஜாவின் ராஜா. (நேருவின் பட்டப்பெயராக ஆகி வந்தது)

17.தொடரில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து நீக்குக.

1.மலையேறிய மக்கள் மாலையில் வேகவேகமாய்க் கீழிறங்கின.

மலையேறிய மக்கள் மாலையில் வேகவேகமாய்க் கீழிறங்கினர்.

2.எங்கள் ஊர்ச் சந்தையில் காய்க்கறிகள் கிடைக்கும்.

எங்கள் ஊர்ச் சந்தையில் காய்கறிகள் கிடைக்கும்.

3.பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதிச் செய்யப்பட்டது.

பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்பட்டது.

4.சிட்டுக்குச் சிறகுகள் முளைத்தது.

சிட்டுக்குச் சிறகுகள் முளைத்தன.

18.ஆகுபெயர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1.விளைச்சல் : மழையில்லாமல் விளைச்சல் பாதித்தது.

2.பால் : பசும்பால் உடலுக்கு நல்லது.

3.முழம் : ஒரு முழம் முல்லைப்பூ எவ்வளவு ?

4.மதுரை : பாண்டியர்கள் மதுரையை ஆண்டனர்.

5.வெள்ளை : பொங்கல் வருவதனால் வீட்டிற்கு வெள்ளை அடித்தான்.

6.பள்ளி : அறிவுக் கண் தரும் ஆலயம் பள்ளி.

19.வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க.

1.நேற்று ஒருவன் வந்தான்; அவன் என் தம்பி.

நேற்று வந்தவன் என் தம்பி.

2.அவர் மகிழுந்தை நிறுத்தினார்; வீட்டிற்குள் நுழைந்தார்.

மகிழுந்தை நிறுத்தியவர் வீட்டிற்குள் நுழைந்தார்.

3.கூண்டுக்குள் கிளியைக் கண்டார்; அதனை வானில் பறக்க விட்டார்.

கூண்டுக்குள் கிளியைக் கண்டவர் அதை வானில் பறக்க விட்டார்.

4.எனக்குக் கவிதை நூலைத் தருவார்; அவரே அதன் பதிப்பாளர்.

எனக்குக் கவிதை நூலைத் தந்தவர் அதன் பதிப்பாளர்.

20.அணி இலக்கணம்

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு

ஆழி எனப்படு வார்"

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

இலக்கணம் : செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

விளக்கம் : சான்றாண்மை மிக்கவர் கடலுக்குக் கரை என்று உருவகம் செய்த வள்ளுவர், ஊழிக் காலத்தை உருவகம் செய்யாமல் விட்டதால், இ∴து ஏகதேச உருவக அணி

2."உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴ தாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து"

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

இலக்கணம் : செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

விளக்கம் : உழுபவரை - அச்சாணி என்று உருவகம் செய்த வள்ளுவர், மற்ற தொழில் செய்பவரை உருவகம் செய்யாமல் விட்டதால், இ∴து ஏகதேச உருவக அணி.

3.'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு

ஐந்துசால்பு ஊன்றிய தூண்"

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பயின்று வரும் அணி : ஏகதேச உருவக அணி

இலக்கணம் : செய்யுள் பொருட்களில் ஒன்றினை உருவகம் செய்து , மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி எனப்படும்.

www.Padasalai.Net

விளக்கம் : சான்றாண்மையைத் தாங்கும் தூண்களை உருவகம் செய்த வள்ளுவர், சான்றாண்மையை உருவகம் செய்யாமல் விட்டதால், இ∴து ஏகதேச உருவக அணி.

4."காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்

கண்டனாம் தாம்கண்ட வாறு." - தொடைநயத்தை விளக்குக.

எதுகைத்தொடை: செய்யுளில் சீர்களிலோ அல்லது அடிகளிலோ இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

கா<u>ணா</u>தான் - கா<u>ணா</u>தான்

தான்கா<u>ணா</u>தான் - க<u>ண்</u>டனாம்

மோனைத்தொடை: செய்யுளில் சீர்களிலோ அல்லது அடிகளிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

<u>கா</u>ணாதான் - <u>கா</u>ணாதான்

<u>தா</u>ன்காணாதான் - <u>தா</u>ம்கண்ட

துணைப்பாடம் : சந்தை

1.எங்கள் ஊர்ச்சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

எங்கள் ஊர்ச்சந்தை திங்கள் சந்தை

எங்கள் ஊரில் திங்கட் கிழமை நடக்கும் சந்தை மிகவும் புகழ்பெற்றது. இங்குச் சின்னஞ் சிறு ஊசி முதல் சிங்கார ஆடைகள் வரை அனைத்துப் பொருட்களும் உள்ளன.

அனைத்து வகையான கீரைகள் , தானியங்கள் தனித்தனியே பெரிய கடைகளைப் போன்று விற்கப்படுகின்றன. பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தாத இயற்கை காய்கறிகள் . பழங்கள் மட்டுமே இங்கு விற்கப்படுகின்றன.

வண்ண வண்ண பூக்களும் , வாசனை மலர்களும் ஏராளம். அதனை வாங்கும் மகளிர் கூட்டம் தாராளம்.பஞ்சுமிட்டாயும், பம்பாய் மிட்டாயும் , கரும்புச் சாறும் , பலாப்பழமும் சந்தையில் போவோர் வருவோரை நாவில் எச்சில் ஊரச்செய்யும்.

மாலை 4 மணி முதல் இரவு 9 மணிவரை சந்தையின் சத்தம் வானளாவி நிற்கும்.

“எனது பயணம்” என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

முன்னுரை

எனது பயண அனுபவம் பற்றிய சுவையான செய்திகளைத் தருகின்றேன்.

ஆயத்தம்

சென்னை செல்வதற்காக எங்கள் பயணம் திட்டமிடப்பட்டது. பயணத்திற்குத் தேவையான பொருட்கள் , நொறுக்குத் தீனி மற்றும் உணவுகள் ஆகியவற்றை எடுத்து ஆயத்தம் ஆனோம்.

தொடர் வண்டிப்பயணம்

ஈரோட்டில் தொடர் வண்டி நிலையத்திலிருந்து கோவை அதிவிரைவு வண்டியில் கிளம்பினோம். வண்டி நகர்ந்ததும் சில்லென்ற காற்று வீசத்தொடங்கியது. சன்னலின் ஓரத்தில் இருக்கை இருந்ததால் மனம் கற்பனைக் கடலில் மூழ்க ஆரம்பித்தது.சேலம் , திருபத்தூர் , வாணியம்பாடி , அரக்கோணம் ஆகிய ஊர்களை எல்லாம் வண்டி கடந்து வந்தது.மரங்களும் மலைகளும் வேகமாக ஓடின.

சென்னை

சென்னையில் இறங்கி வள்ளுவர் கோட்டம் சென்றோம்.வள்ளுவர் வடித்த திருக்குறள் காட்சிகள் கண்ணைக் கவரும் வண்ணம் இருந்தது.பிறகு மெரினா கடற்கரை சென்றோம்.கடலின் காட்சி கவின்மிகு காட்சியாக இருந்தது.பிறகு கன்னிமாரா நூலகம் சென்றோம். நூல்களின் குவியல்களைக் கண்டு வியந்தேன்.மாமல்லபுரம் சென்றோம். சிற்பங்களின் கலையழகில் மூழ்கினேன்.தலைவர்களின் சமாதிகளைக் கண்டுகளித்தோம்.

திரும்புதல்

மீண்டும் தொடர் வண்டி மூலம் அடுத்த நாள் இரவு ஈரோடு வந்தோம்.

இயல் -3

இலக்கணம் : புணர்ச்சி

**1.புணர்ச்சிகளை’முதல், ஈற்றுச்’ சொல்வகையால் பொருத்துக.**

**செல்வி+ஆடினாள்- உயிரீறு + உயிர்முதல்**
**பாலை + திணை - உயிரீறு + மெய்ம்முதல்**
**கோல்+ ஆட்டம் - மெய்யீறு + உயிர்முதல்**
**மண் + சரிந்தது - மெய்யீறு + மெய்ம்முதல்**

**2. சேர்த்து எழுதுக.**
**அ) தமிழ் + பேசு = தமிழ் பேசு**
**ஆ) தமிழ் + பேச்சு = தமிழ் ப்பேச்சு**
**இ) கை + கள்= கை கள்**
**ஈ) பூ + கள் = பூக் கள்**
**3. பொருத்தமான உடம்படுமெய்யுடன் இணைக்க.**
**அ) பூ + இனம் - பூவினம்**
**ஆ) இசை+ இனிக்கிறது - இசையினிக்கிறது.**
**இ) திரு + அருட்பா - திருவருட்பா**
**ஈ) சே+ அடி - சேயடி , சேவடி**

## சிந்தனைகிளர் வினாக்கள்

**அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டைஎழுதுக.**

ஒரு மாத்திரையில் இருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம். கு,சு,டு,து,பு,று ஆகியவற்றில் வரும் உகரம்.

ஒரு மாத்திரையில் இருந்து குறையாது ஒலிக்கும் உகரம் முற்றியலுகரம்.

க்,ச்,ட்,த்,ப்,ற் என்ற மெய் தவிர பிறவற்றில் வரும்.

www.Padasalai.Net

2.புணர்ச்சி என்றால் என்ன?

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் சேர்வது புணர்ச்சி ஆகும்.

3.புணர்ச்சி எத்தனை வகைப்படும் ?

புணர்ச்சி இரண்டு வகைப்படும்.
1. இயல்புப்புணர்ச்சி 2. விகாரப்புணர்ச்சி

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் எவ்வித வேறுபாடும் இன்றி சேர்வது இயல்புப் புணர்ச்சி ஆகும்.

சான்று:மாமரம

5.விகாரப்புணர்ச்சி விளக்குக.

நிலை மொழி இறுதியும் வருமொழி முதலும் சேரும் போது மாறுபட்டுப் புணர்வது விகாரப் புணர்ச்சி ஆகும்.

1.தோன்றல் 2.திரிதல் 3.கெடுதல் ஆகிய விகாரம் அடைந்து புணரும்.

மொழிபெயர்க்க

**1.strengthen the body.**
உடலினை உறுதி செய்
**2.Love your food.** உணவை நேசி.
**3.Thinking is great.**நல்லதே நினை.
**4.Walk like a bull.**ஏறு போல் நட.
**5.Union is strength.**ஒற்றுமையே பலம்.
**6.Practice what you have learnt.**
படித்ததைப் பழகிக் கொள்.

மரபுத்தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

1.உடும்புப்பிடி : நட்பில் அன்பு உடும்புப்பிடி போன்றது.
2.கிணற்றுத்தவளை: வெறும் பாடப்புத்தக அறிவு மட்டும் இருப்பது கிணற்றுத்தவளை போலத் தான்.
3.ஆகாயத்தாமரை : படிக்காமலே தேர்ச்சி பெறுவேன் என்பது ஆகாயத்தாமரை பூப்பது போலத்தான்.
4.எடுப்பார் கைப்பிள்ளை : கைகேயி மந்தரையின் பேச்சைக் கேட்டு எடுப்பார் கைப்பிள்ளையானாள்.
5.மேளதாளத்துடன்: கிராம மக்கள் அமைச்சரை மேளதாளத்துடன் வரவேற்றனர்.

மரபுப்பிழை நீக்கி எழுதுக.

1.இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
இல்லத்தின் அண்மையில் புதிதாகக் கூரை வேய்ந்தனர்.
2.கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டான்.
கயல் பானை செய்யக் வனையக் கற்றுக் கொண்டான்.
3.நேற்று தென்றல் காற்று அடித்தது.
நேற்று தென்றல் காற்று வீசியது.
4.தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தனர்.
தென்னை மட்டையிலிருந்து நார் உரித்தனர்.
5.அணில் பழம் சாப்பிட்டது.
அணில் பழம் கொறித்தது.
6.கொடியில் உள்ள மலரை எடுத்து வா.
கொடியில் உள்ள மலரை பறித்து வா.

உவமைகளை உருவகத் தொடர்களாக மாற்றுக.

1.மலர்விழி - விழிமலர் , வெள்ளம் போன்ற இன்பத்தில் - இன்ப வெள்ளம்.
2.கடல் போல கவலையிலிருந்து - கவலைக் கடல்.
3.தேன் போன்ற மொழியை - மொழித்தேன், பவளவாய் - வாய்ப்பவளம்.
4.முத்துநகை - நகைமுத்து , வில் போன்ற புருவத்தில் - புருவவில்

விரிவானம் : செய்தி

1.இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.

முன்னுரை

செய்தி என்னும் சிறுகதையின் ஆசிரியர் தி.ஜானகிராமன். இசைக்கு நாடு , மொழி , இனம் தேவையில்லை என்பதை இக்கதையில் காண்போம்.

www.Padasalai.Net

வித்துவான்

இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. அத்தகைய இசைக்குக் காரணம் இசைக் கருவிகள்.தமிழக இசையில் தன்முத்திரை பதித்தது நாதஸ்வரம்.இதில் பல இராகங்களைக் கொண்டு வித்துவான் வாசித்தார்.அதே நிகழ்ச்சியில் பிலிப் போல்ஸ்கா என்ற வித்வானும் வந்திருந்தார்.

இசை மயக்கம்

நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கத் தொடங்கினார்.நாதஸ்வர இசை இனிக்க ஆரம்பித்தது. போல்ஸ்கா சிரித்தபடியே தன்னையே இழந்து இரசிக்கின்றார். இசை வெள்ளத்தில் மிதக்கின்றார். வெளிநாட்டவர் தமிழக இசைக்கு மெய்மறக்கின்றனர். வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது.ஆடவும் செய்தது.

செய்தி

வித்வானிடம் சாந்தமுலேகாவை 5 , 6 முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார். இதில் ஒரு செய்தி இருப்பதாகவும் , ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது. நான் அதில் மூழ்கிவிட்டேன் என்றார் போல்ஸ்கா.எனக்கு அனுப்பிய செய்தி , உலகத்திற்கே அனுப்பிய செய்தி , அது தமிழ் இசையின் செய்தி. வேறு எந்த சங்கீதமும் இதனைக் கொடுக்கவும் இல்லை.அதனை நான் வாங்கிக் கொண்டேன்.

முடிவுரை

போல்ஸ்காவின் செயல்பாடுகள் இசைக்கு நாடு , மொழி , மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

**இலக்கணக் குறிப்பு**

1.மாக்கடல் - உரிச்சொல் தொடர்
2.ஆக்கல் - தொழிற்பெயர்
3.மலர்க்கை - உவமைத்தொகை
4.வில்வாள் - உவமைத்தொகை
5.தவிர்க்கஒணா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
6.தாவா -ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
7.அறிவார் , வல்லார் - வினையாலனையும் பெயர்
8.விதையாமை , உரையாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்
9.செங்கோல் , பேரழகு - பண்புத்தொகை
10.எழுந்த - பெயரெச்சம்
11.பாடாத - எதிர்மறைப் பெயரெச்சம்
12.பாடு - ஏவல் வினைமுற்று
13.ஓங்கிய - பெயரெச்சம்
14.நிலைஇய - சொல்லிசையளபெடை
15.குழாஅத்து - செய்யுளிசையளபெடை
16.வாயில் - இலக்கணப்போலி
17.மாகால் - உரிச்சொல் தொடர்
18.முழங்கிசை , இமிழிசை - வினைத்தொகை
19.நெடுநிலை , முந்நீர் - பண்புத்தொகை
20.மகிழ்ந்தோர் - வினையாலனையும் பெயர்
21.இடிகுரல் -உவமைத்தொகை
22.இன்னுயிர் , பைங்கிளி , முதுவெயில் , கருமுகில் - பண்புத்தொகை
23.பிடிபசி - வேற்றுமைத்தொகை
24.பூவையும் குயில்களும் , முதிரையும் சாமையும் வரகும் - எண்ணும்மை
25.வருமலை , அதிர்குரல் - வினைத்தொகை
26.மரைமுகம் - உவமைத்தொகை
27.கொட்ட - வினையெச்சம்

## பொதுக்கட்டுரைகள்

### 1. நூலகம்

**முன்னுரை:**

நூல் ஃஅகம் ஸ்ரீ நூலகம். ஆறிவினை உற்பத்தி செய்யும் இடம் நூலகம். நூலகம் பற்றி இனிக் காண்போம்.

**நூலகம்:**

"நூல் பல கல்"

புத்தகம் இருக்கும் இடம் நூலகம். புத்தகம் படிக்கும் இடம் நூலகம். ஆங்கிலம், தமிழ், அறிவியல்,சமூக அறிவியல்,கணிதம்,கணினி எனப் பல நூல்கள் காணப்படும் இடம் நூலகம்.

**நூலக வகைகள்:**

1.பள்ளி நூலகம்

2.கல்லூரி நூலகம் 3.பல்கலைக்கழக நூலகம்

4.பொது நூலகம் 5.தனியார் நூலகம்

- என நூலகம் பல வகைப்படும்.

பயன்படுத்தும் முறை :

"அறிஞர்கள் வாழுமிடம் -- நூலகம்"

அ. நூலக உறுப்பினராகி நூல்களை எடுத்துச் சென்று படிக்கலாம்.

ஆ. நூலகத்தில் அமைதியாகப் படிக்க வேண்டும்.

இ.சத்தமாகப் படிக்கக் கூடாது.

ஈ.குறிப்பு எடுத்துக் கொள்ளலாம்.

பயன்கள்

1.மேற்படிப்புக்கு உதவும்,

2.பொது அறிவு வளரும்.

3.அரசு வேலைக்கு உதவும்.

4.பொழுது போகும்.

முடிவுரை:

அனைவரும் நூலகம் சென்று படிப்போம். நல்லறிவைப் பெறுவோம்.நூலக உறுப்பினர் ஆவோம்.

"நூலகத்தின் சேவை ! மனிதனுக்குத் தேவை!

**2. பெண்கல்வி (அல்லது) பெண்கள் முன்னேற்றம்**

முன்னுரை

"மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா " என்றார் கவிமணி. அத்தகைய சிறப்பு மிக்க இனம் பெண்ணினம்.

பெண்ணின் சிறப்பு

மொழி , நாடு , மண் , ஆறு , இறைவன் ஆகிய அனைத்தும் பெண்கள்.பாரதியும் , பாரதிதாசனும் , பெரியாரும் போற்றிய பெருமைக்குரியவள் பெண்.

பெண்ணடிமை

அச்சம் , மடம் , நாணம் , பயிர்ப்பு ஆகிய நான்கும் பெண்ணுக்குரியது என்று கூறி பெண்ணை அடிமைப்படுத்தினர்.சமைப்பதும் , குழந்தை பெறுவதும் பெண்ணுக்குரியதாய் கூறி அடிமைப்படுத்தினர்.

பெண்கல்வி

ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்றார் பாரதி. பெண்கட்கு கல்வி வேண்டும் என்றார் பாரதிதாசன். திரு.வி.க., காந்தியடிகள் , பெரியார் ஆகியயோர் பெண்கல்விக்குக் குரல் கொடுத்தனர்.

பெண் முன்னேற்றம்

இந்திரா காந்தி , அன்னை தெரஸா ,கிரண்பேடி , கல்பனா சாவ்லா , சுனிதா வில்லியம்ஸ் , பாத்திமா பீவி ஆகிய பெண்கள் கல்வியால் சிறந்து பெருமை பெற்ற பெண்கள்.

முடிவுரை

இன்று பெண்கல்வி வளர்ந்து வருகின்றது.பெண்களுக்கென்று தனிப்பள்ளிகள் , தனிக்கல்லூரிகள் தோன்றிவிட்டன. பெண்கள் கல்லாத நிலை இல்லை என்பது உருவாக வேண்டும்.

ஆக்கம்: ச. சேட்டு மதார்சா,
பட்டதாரி ஆசிரியர்- தமிழ்.
ஈ.கே.எம்.அ.க. மதரஸா இஸ்லாமியா(நிதி உதவி) உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு – 638001. அலைபேசி - 8883681115

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2013/09/9th-standard-materials.html